தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர் மா.ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்:pro@tnau.ac.in

பெறுநர், தேதி: 21.02.2025

ஆசிரியர்,

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

# தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் மற்றும் நறுமணப்பயிர்கள் வாரியம் இணைந்து நடத்திய திறன் மேம்பாட்டுப் பயிற்சி

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் விரிவாக்கக் கல்வி இயக்ககத்தின் பயிற்சிப் பிரிவும், ஈரோடு நறுமணப்பயிர்கள் வாரியமும் இணைந்து, விவசாயிகளுக்கான நறுமணப் பயிர் சாகுபடி மற்றும் மதிப்புக் கூட்டல் தொழில்நுட்பங்கள் குறித்த திறன் மேம்பாட்டுப் பயிற்சித் திட்டம் 18.02.2025 முதல் 20.02.2025 வரை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக கோயம்புத்தூரில் நடத்தப்பட்டது.

இப்பயிற்சித் திட்டம் 18.02.2025 அன்று துவக்க விழாவுடன் தொடங்கியது. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக விரிவாக்கக் கல்வி இயக்ககத்தின் பயிற்சிப் பிரிவின் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் நா. ஆனந்தராஜா, பயிற்சித் திட்டத்தின் சுருக்கத்தைக் கூறினார். மேலும், தமிழ்நாட்டில் நறுமணப் பயிர் சாகுபடியின் ஒட்டுமொத்த உற்பத்தி மற்றும் உற்பத்தித்திறன் குறித்து விளக்கினார்.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் தோட்டக்கலை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் முதன்மையர் முனைவர். பெ. ஐரின் வேதமணி இந்நிகழ்வில் கலந்து கொண்டு துவக்க உரை வழங்கினார். அவர் நறுமணப் பயிர் சாகுபடி, சந்தைப்படுத்துதலின் முக்கியத்துவத்தை வலியுறுத்தினார். மேலும், வேளாண் பொருட்களுக்கான சந்தையை மேம்படுத்துவதில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் முயற்சிகளை விளக்கினார். தமிழ்நாடு முழுவதும் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் மையங்கள் மூலம் சுமார் 112 விவசாய உற்பத்தியாளர் அமைப்புகள் ஒருங்கிணைக்கப்பட்டு அவற்றின் மேம்பாட்டிற்கு தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் உறுதுணை செய்கிறது எனக் குறிப்பிட்டார்.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் தோட்டக்கலை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் நறுமணப் பயிர்கள் துறையின் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர். ராஜஸ்ரீ, நறுமணப் பயிர் சாகுபடியில் தனது அனுபவத்தைப் பகிர்ந்து கொண்டார். அவர் நறுமணப் பயிர் விற்பனையில் புதிய முயற்சிகள் குறித்த தனது கருத்துக்களைத் தெரிவித்தார்.

ஈரோடு நறுமணப் பயிர்கள் வாரியத்தின் உதவி இயக்குநர் திரு. க. கனகதீலிபன், நறுமணப் பயிர் சாகுபடிக்கு வாரியத்தின் மூலம் வழங்கப்படும் திட்டங்களைப் பற்றி விளக்கினார். கொல்லிமலையைச் சேர்ந்த சுமார் முப்பது விவசாயிகள் இப்பயிற்சித் திட்டத்தில் கலந்து கொண்டனர்.

பயிற்சியில் வகுப்பறை அமர்வுகள், கலந்துரையாடல் மற்றும் களப் பார்வையிடல் ஆகியவை அடங்கும். மஞ்சள், மிளகு, ஜாதிக்காய் போன்ற முக்கிய நறுமணப் பயிர்களின் சாகுபடி, நறுமணப் பயிர் சாகுபடியின் வாய்ப்புகள் மற்றும் இடர்பாடுகள், இயற்கை சாகுபடி முறைகள், உயிரியல் வள தொழில்நுட்பங்கள், சந்தைப்படுத்துதலுக்கான சமூக ஊடகங்கள், ஒருங்கிணைந்த பூச்சி மற்றும் நோய் மேலாண்மை, நறுமணப் பொருட்கள் ஏற்றுமதி, மதிப்பு கூட்டல் தொழில்நுட்பங்கள் மற்றும் வணிக மேம்பாடு போன்ற தலைப்புகளில் அனுபவம் வாய்ந்த பேராசிரியர்களும் தொழில் முனைவோர்களும் தொழில்நுட்ப உரைகள் வழங்கினார்கள்.

நிறைவு விழா 20.02.2025 அன்று நடைபெற்றது. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் விரிவாக்கக் கல்வி இயக்குநர் முனைவர். பி. பொ. முருகன் இந்நிகழ்வில் கலந்து கொண்டு பங்கேற்பாளர்களுக்குச் சான்றிதழ்களை வழங்கினார். நறுமணப் பயிர் சாகுபடி மற்றும் அறுவடைக்குப் பின் தொழில்நுட்பங்கள் குறித்த புத்தகம் வெளியிடப்பட்டது. தனது நிறைவுரையில், அவர் நறுமணப் பொருட்கள் சந்தைப்படுத்துதலின் முக்கியத்துவத்தை வலியுறுத்தினார். விவசாயிகளின் தொழில் முனைவோர் திறன்களை மேம்படுத்துவதில் உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களின் பங்கையும் எடுத்துரைத்தார்.

இப்பயிற்சித் திட்டம் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் விரிவாக்கக் கல்வி இயக்ககத்தின் பயிற்சிப் பிரிவின் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர். நா. ஆனந்தராஜா அவர்களால் ஒருங்கிணைக்கப்பட்டது. கோயம்புத்தூர் விரிவாக்கக் கல்வி இயக்ககத்தின் இணைப் பேராசிரியர் முனைவர். சி.சிந்தியா பெர்னாண்டஸ் மற்றும் திருப்பூர், வேளாண்மை அறிவியல் நிலைய உதவி பேராசிரியர் முனைவர் செ. திலகம் உதவி செய்தார்கள்.

**மக்கள் தொடர்பு அலுவலர்**